**கவனிக்க**.-*2019.12.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2154 - 2019 දෙසැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2019.12.13

*2154 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 224 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, சனவரி 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


223-B81586-353 (2019/12)

# நானாவித அறிவித்தல்கள்

## அறிவித்தல்

### குடியியல் நியாயாதிக்கத்தைக் கொண்ட மேல் மாகாண மேல் நீதிமன்றில் (கொழும்பில் அமையப்பெற்றது)

இல. 65. கிருல வீதி, கொழும்பு 05 இல் அமைந்துள்ள FRONTIER AUTOMOTIVE (PRIVATE) LTD விடயத்திலும்.

ஒடுக்குவதற்கான விண்ணப்பம் இலக்கம்: 84/2019/ CO

மற்றும்

2007 ஆம் ஆண்டு இல. 07 கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் கீழ் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான ஓர் விண்ணப்பம்

ரிச்சட் டீ சொய்சா,
இல. 199/2, காலி வீதி, கல்கிஸ்சை.

மனுதாரர்

மேற்கூறப்பட்ட கம்பனியை மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் (கொழும்பில் அமையப்பெற்றது) ஒடுக்குவதற்கான மனு 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆம் திகதி.

ரிச்சட் டீ சொய்சா,
இல. 199/2, காலி வீதி, கல்லிஸ்சை.

என்பவரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்றும்.

குறித்த மனுவானது 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24ஆந் திகதி நீதிமன்றத்துக்கு முன் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ள தென்றும், மேற்குறித்த மனு சம்பந்தமாக மேற்குறித்த கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது குறித்த மனு தொடர்பில் கட்டளை பிறப்பிப்பதை ஆதரவு அல்லது எதிர்க்க விரும்பின் விசாரணையின்போது நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அக்காரணத்திற்காக பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் மேற்படி கம்பனிக்கு எந்தவொரு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்குத் தேவைப்படின், மனுவின் ஒரு பிரதி கீழ் கையொப்பமிடப்பட்டவரினால் அதற்குரிய கட்டணத்தின்படி பணக்கொடுப்பனவின் பிரகாரம் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

(திருமதி) தில்ஹானி எஸ். அஹங்கம,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 438/4E, ஹிம்புட்டான ஒழுங்கை,
முல்லேரியாவ.

**குறிப்பு**:- மேற் குறித்த மனுவின் விசாரணையின் போது நேரில் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொள்வதாயின் அவர்/ அதனின் நோக்க அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணியான திருமதி தில்ஹானி எஸ். அஹங்கம அவர்களுக்கு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சேர்ப்பிக்க வேண்டும். குறித்த அறிவித்தல் நபர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்கள் அல்லது கம்பனியாக இருப்பின் கம்பனியின் பெயர் மற்றும் விலாசம் அல்லது அவர்களுக்கு/அவருக்கு பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி இருப்பின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியின் பெயர் என்பவற்றை குறித்து மேற்குறித்தவருக்கு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் போதிய கால அவகாசத்துடன் கிடைக்கக் கூடியதாக 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி பி. ப. 6.00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(திருமதி) தில்ஹானி எஸ். அஹங்கம,
மனுதாரரின் சட்டத்தரணி.

12-334

## அறிவித்தல்

### மனு பற்றிய விளம்பரம்

### கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில் (குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்)

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII இனதும் ஒடுக்குதல் விதிகளினதும் கீழ் திக்வெல்ல, கூன்தெனிய, அசோகா ராம வீதியிலுள்ள ட்ரெஸ் மோ (பிரைவட்) லிமிடட் நீதிமன்றத்தினால்ஒடுக்கப்படும் விடயம்.*

மே. நீ. (குடியியல்)
வழக்கு இல.
74/2019/CO

*பன்னிபிட்டிய, பொல்வத்த, இல. 31 இன் ''சன்என்டர்ப்ரைஸஸ்'' எனும், வியாபாரத்தின் உரிமையாளர் பன்னிபிட்டிய பொல்வத்த, இல. 31இல் ஆனந்தவத்தகே ரனால் சஞ்சீவ அல்விஸ்.*

*மனுதாரர்*

*கொழும்பில் அமரும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தினால் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று, 2019 செத்தெம்பர் 25 ஆம் நாளன்று பன்னிபிட்டிய, பொல்வத்த 31 ஆம் இலக்கத்திலுள்ள ஆனத்தவத்தகே ரனால் சஞ்சீவ அல்விஸ் இனால் சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்ட தென்றும், சொல்லப்பட்ட மனுவானது, 2020, சனவரி 29 ஆம் நாளன்று செல்லப்பட்ட நீதிமன்றத்தின் முன்னர் கேட்கப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றதுடன், சொல்லப்பட்ட, மனுமீது கட்டளையொன்று ஆக்கப்படுவதனை ஆதாரரப்படுத்துவதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்புகின்ற சொல்லப்பட்ட கம்பெனியின் எவரேனும் கடன்கொடுநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் அந்நோக்கத்துக்காக நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது பதிவுசெய்யப்பட்ட அற்றோணி மூலமாகவோ கேட்பு நேரத்தில் தோற்றலாம், அத்துடன் மனுவின் பிரதியொன்று, அதனைத் தேவைப்படுத்தும் சொல்லப்பட்ட கம்பெனியின் எவரேனும் கடன்கொடுநருக்கு அல்லது உதவுத்தொகை செலுத்துனருக்கு அதற்காக விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீது கீழே கையொப்பமிட்டவரினால் கொடுத்துதவப்படும்.*

*நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ்,
மனுதாரருக்கான பதிவு செய்யப்பட்ட அற்றோணிகள்,
இல. 28 (மட்டம் 2), டபிள்யூ .ஏ. டி. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.*

**குறிப்பு**:- *சொல்லப்பட்ட - மனுவின் கேட்பின் போது தோன்றுவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், அவ்வாறு செய்வதற்கான அவரது உட்கருத்துப் பற்றிய எழுத்திலான அறிவித்தலை மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணிகளான திருவாளர் நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ் என்போருக்குச் சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலின் மூலம் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலானது, ஆளின் பெயரையும் முகவரியையும், அல்லது குழுமமொன்றாயின் குழுமத்தின் பெயரையும் முகவரியையும் கூறுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாளினால் அல்லது அக்குழுமத்தினால், அல்லது அவரது அல்லது அவர்களது பதிவு செய்யப்பட்ட அற்றோணிகளினால் (எவரேனுமிருப்பின்) கையொப்பமிடப்படுதலும் வேண்டும், மேலே பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு 2020, சனவரி 28 ஆம் நாளன்று பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் அது சேர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது அஞ்சலிலிடப்படின், அந்நேரத்துக்கு முன்னர் அவரைச் சென்றடையக் கூடியவகையில் போதிய நேர காலத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.*

*நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ்,
மனுதாரருக்கான பதிவு செய்யப்பட்ட அற்றோணிகள்,
இல. 28 (2ஆம் மாடி), டபிள்யூ .ஏ.டி. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.*

*12-367*

## அறிவித்தல்

### மனு பற்றிய விளம்பரம்

### கொழும்பில் நடைபெறும்
### மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில்
### (குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்)

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII இனதும் ஒடுக்குதல் விதிகளினதும் கீழ் திக்வெல்ல, கூன்தெனிய, அசோகா ராம வீதியிலுள்ள நிவ். பி. ஜி. பெஷன் கார்மன்ட் (பிறைவட்) லிமிடட் நீதிமன்றத்தினால் ஒடுக்கப்படும் விடயத்தில்.

மே. நீ. (குடியியல்)
வழக்கு
இல. 76/2019/CO

பன்னிபிட்டிய, பொல்வத்த, இல. 31 இன் ''சன்என்டர்ப்ரைஸஸ்'' எனும், வியாபாரத்தின் உரிமையாளர் பன்னிபிட்டிய பொல்வத்த, இல. 31இல் ஆனத்தவத்தகே ரனால் சஞ்சீவ அல்விஸ்.

மனுதாரர்

கொழும்பில் அமரும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தினால் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று, 2019, செத்தெம்பர் 25 ஆம் நாளன்று பன்னிபிட்டிய, பொல்வத்த 31 ஆம் இலக்கத்திலுள்ள ஆனந்தவத்தகே ரனால் சஞ்சீவ அல்விஸ் சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்கு முன்னவக்கப்பட்ட தென்றும், சொல்லப்பட்ட மனுவானது, 2020, சனவரி 29 ஆம் நாளன்று செல்லப்பட்ட நீதிமன்றத்தின் முன்னர் கேட்கப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றதுடன், சொல்லப்பட்ட, மனுமீது கட்டளையொன்று ஆக்கப்படுவதனை ஆதாரப்படுத்துவதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்புகின்ற சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் அந்நோக்கத்துக்காக நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது பதிவு செய்யப்பட்ட அற்றோணி மூலமாகவோ கேட்பு நேரத்தில் தோற்றலாம், அத்துடன் மனுவின் பிரதியொன்று, அதனைத் தேவைப்படுத்தும் சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துனருக்கு அதற்காக விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீது கீழே கையொப்பமிட்டவரினால் கொடுத்துதவப்படும்.

நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ்,
மனுதாரருக்கான பதிவு செய்யப்பட்ட அற்றோணிகள்,
இல. 28 (மட்டம் 2), டபிள்யு .ஏ.டி. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

**குறிப்பு**:- சொல்லப்பட்ட - மனுவின் கேட்பின் போது தோன்றுவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், அவ்வாறு செய்வதற்கான அவரது உட்கருத்துப் பற்றிய எழுத்திலான அறிவித்தலை மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணிகளான திருவாளர் நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ் என்போருக்குச் சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலின் மூலம் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலானது, ஆளின் பெயரையும் முகவரியையும், அல்லது குழுமமொன்றாயின் குழுமத்தின் பெயரையும் முகவரியையும் கூறுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாளினால் அல்லது அக்குழுமத்தினால், அல்லது அவரது அல்லது அவர்களது பதிவு செய்யப்பட்ட அற்றோணிகளினால் (எவரேனுமிருப்பின்) கையொப்பமிடப்படுதலும் வேண்டும், மேலே பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு 2020, சனவரி 28 ஆம் நாளன்று பிற்பகல் 6.00 மணிக்குப் பிந்தாமல் அது சேர்ப்பிக்கப்பட வேண்டும், அல்லது அஞ்சலிலிடப்படின், அந்நேரத்துக்கு முன்னர் அவரைச் சென்றடையக் கூடியவகையில் போதிய நேர காலத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ்,
மனுதாரருக்கான பதிவுசெய்யப்பட்ட அற்றோணிகள்,
இல. 28 (2 ஆம் மாடி), டபிள்யு .ஏ.டி. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

12-368

**அறிவித்தல்**

**மனு பற்றிய விளம்பரம்**

**கொழும்பில் நடைபெறும்**
**மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில்**
**(குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்)**

*2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII இனதும் ஒடுக்குதல் விதிகளினதும் கீழ் திக்வெல்ல, கூன்தெனிய, அசோகா ராம வீதியிலுள்ள நிவ். டி. ஜி. பெவுன் மாகடிங் (பிறைவட்) லிமிடட் நீதிமன்றத்தினால் ஒடுக்கப்படும் விடயத்தில்.*

மே. நீ. (குடியியல்)
வழக்கு
இல. 75/2019/CO

*பன்னிபபிட்டிய, பொல்வத்த, இல. 31 இன் ''சன்என்டர்ப்ரைஸஸ்'' எனும், வியாபாரத்தின் உரிமையாளர் பன்னிபிட்டிய பொல்வத்த, இல. 31இல் ஆனந்தவத்தகே ரனால் சஞ்சீவ அல்விஸ்.*

*மனுதாரர்*

*கொழும்பில் அமரும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தினால் (அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று, 2019, செத்தெம்பர் 25 ஆம் நாளன்று பன்னிபிட்டிய, பொல்வத்த, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஆனந்தவத்தகே ரனால் சஞ்சீவ அல்விஸினால் சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்கு முன்வக்கப்பட்ட தென்றும், சொல்லப்பட்ட மனுவானது, 2020, சனவரி 27 ஆம் நாளன்று செல்லப்பட்ட நீதிமன்றத்தின் முன்னர் கேட்கப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றதுடன், சொல்லப்பட்ட, மனுமீது கட்டளையொன்று ஆக்கப்படுவதனை ஆதாரப்படுத்துவதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்புகின்ற சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் அந்நோக்கத்துக்காக நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது பதிவு செய்யப்பட்ட அற்றோணி மூலமாகவோ கேட்பு நேரத்தில் தோன்றலாம், அத்துடன் மனுவின் பிரதியொன்று, அதனைத் தேவைப்படுத்தும் சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்கொடுநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துனருக்கு அதற்காக விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவின்மீது கீழே கையொப்பமிட்டவரினால் கொடுத்துதவப்படும்.*

*நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ்,*
*மனுதாரருக்கான பதிவு செய்யப்பட்ட அற்றோணிகள்,*
*இல. 28 (மட்டம் 2), டபிள்யூ .ஏ.டி. ராமநாயக்க மாவத்தை,*
*கொழும்பு 2.*

**குறிப்பு** :- *சொல்லப்பட்ட - மனுவின் கேட்பின்போது தோன்றுவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், அவ்வாறு செய்வதற்கான அவரது உட்கருத்துப் பற்றிய எழுத்திலான அறிவித்தலை மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணிகளான திருவாளர் நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ் என்போருக்குச் சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது அஞ்சலின் மூலம் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலானது, ஆளின் பெயரையும் முகவரியையும், அல்லது குழுமமொன்றாயின் குழுமத்தின் பெயரையும் முகவரியையும் கூறுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாளினால் அல்லது அக்குழுமத்தினால், அல்லது அவரது அல்லது அவர்களது பதிவு செய்யப்பட்ட அற்றோணிகளினால் (எவரேனுமிருப்பின்) கையொப்பமிடப்டுதலும் வேண்டும், மேலே பெயர் குறிப்பிடப்பட்டவருக்கு 2020, சனவரி 25 ஆம் நாளன்று பிற்பகல் 1.00 மணிக்குப் பிந்தாமல் அது சேர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது அஞ்சலிலிடப்படின், அந்நேரத்துக்கு முன்னர் அவரைச் சென்றடையக் கூடியவகையில் போதிய நேரகாலத்துடன் அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.*

*நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ்,*
*மனுதாரருக்கான பதிவுசெய்யப்பட்ட அற்றோணிகள்,*
*இல. 28 (2 ஆம் மாடி), டபிள்யூ .ஏ.டி. ராமநாயக்க மாவத்தை,*
*கொழும்பு 2.*

*12-369*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.